**OS.NO:22/2024**

**PW :3 (நரசிம்மன் த/பெ. ஸ்ரீராமலு செட்டியார்)**

நாள் : 21.08.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

கணேச முதலியாரின் பெண் பிள்ளைகள் இந்த வழக்கை ரங்கநாதனுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். நான் வேறு இனத்தையும் வாதி பிரதிவாதி வேறு இனத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். கணேச முதலியாரை எனக்கு 50 வருடமாக தெரியும். கணேச முதலியார் தாவா சொத்தை ஒரு பாயிடமிருந்து வாங்கினார் அவர் பெயர் எனக்கு தெரியாது. எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை நான் பார்த்துள்ளேன். அந்த வீட்டின் முன்பாக MGRN என்ற எழுத்து பொறிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அதற்கான விளக்கம் என்னவென்றால் முங்கிலேரியான் கணேசன் ரங்கநாதன் என்பதை குறிக்கும் என்று சொன்னால் ஆமாம்.அந்த இரங்கநாதன் தான் பிரதிவா்தி என்று சொன்னால் சரிதான். கணேச முதலியார் யார் பெயரில் எந்த தேதியில் உயில் எழுதினார் என்றார் உயில் எழுதி விவரம் மட்டும் தான் தெரியும் யார் பேரில் எந்த தேதியில எழுதினார் என்று என்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் எந்த தேதியில் கணேச முதலியார் யார் பெயருக்கு உயில் எழுதிக்கொடுத்தார் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை படிக்காமலே கையொப்பம் இட்டுள்ளேன் என்றும் அதில் பத்தி 3-ல் உயில் ஆவண எண். 49/2017 என்று எனக்கு தெரியாத விவரத்தை கூறியுள்ளேன் என்று சொன்னால்

சரியல்ல. உயில் எழுதிய விவரத்தை கணேச முதலியார் தான் என்னிடம் கூறினார். அவர் கூறியதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கறேன் மற்ற படி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். கணேச முதலியார் வாழ்கையில் எத்தனை உயில்கள் எழுதினார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட உயில் நடைமுறைக்கு வந்தாத இல்லையா என்று சொன்னால் எனக்கு தெரியாது. கணேச முதலியாரின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. கணேச முதலியாரின் மனைவி தான் முதலில் இறந்தார். அவர் இறந்து 5 ஆண்டுகள் இருக்குமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கணேச முதலியாரின் மனைவி இறந்த பிறகு ரங்கநாதனும் அவரது பிள்ளைகளும் தான் கணேச முதலியாரை பார்த்துக்கொண்டார்களா என்றால் இல்லை எல்லா பிள்ளைகளும் பார்த்துக்கொண்டார்கள் அவர்கள் யார் யார் என்றால் வாதிகள் மற்றும் பிரதிவாதி தான். கணேச முதலியருக்கு உடல் நிலை சரியில்லாத போது யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் முகப்பில் 2 கடைகள் உள்ளது என்றால் சரிதான் அதன் வாடகையை ரங்கநாதனும் அவருடைய பிள்ளைகள் தான் வசூலித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் ரங்கநாதன் தா'ன வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். கணேச முதலியார் இறப்பதற்கு 4, 5 வருடங்களுக்கு முன்பு மற்றவர்கள் பேசுவதை புரிந்து கொள்ளும் நிலையில் இருந்தாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு கணேச முதலியாரை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றும் அவர் ,இறப்பதற்கு 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு புத்தி சுவாதினம் இன்றி யார் என்ன கூறுகிறார் என்று புரிந்து கொள்ளகூடிய நிலையில் இலை என்றும் அவரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விவரம் கூட தெரியாது என்றும் வாதிகளுக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல, கணேச முதலியாரை தெரியும் அவருக்கு உடல் நிலை சரியலல்லது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு 3 மகன்கள் அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. அதில் 1 மகன் அசோக்குமார் என்பவர் சோளிங்கரில் உள்ள TVS கம்பனியில் வேலை செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான் அவர் தனது தாத்தாவான கணேச முதலியாரை பார்த்துக்கொள்வதற்காகவே வேலையை விட்டு நின்றுவிட்டார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கணேச முதலியாரின் மகள் விஜய லட்சுமியின் கணவர் பெயர் எனக்கு தெரியாது அவருடைய மற்றொரு மகளான மல்லிகா வின் பெயர் மட்டும் தான் தெரியும் மற்றவர்கள் பெயர் தெரியாது. விஜய லட்சுமியின் கணவர் பெயர் ரமேஷ் என்றும் அவருடன் தான் நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரிதான். எனவே நான் வாதிகளின் வற்புறுத்தலின் பெயரில் தான் தெரியாத சங்கதிகளை நான் சாட்சியம் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல என்னை யாரும் வற்புறுத்தவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 9–ல் கூறியுள்ள விவரத்தின் மூலமாக நான் இந்த வழக்கில் வாதிகளின் விருப்ப சாட்சி என்று தெரிய வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**